சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 69/2021

PW 1 ராஜேஸ்வரி 13.06.2024

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

| | |
|---|---|
| 1.மசாஆ 13 - | கங்கா மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரி அசல். |
| 2.மசாஆ 14- | மருந்து பில்கள் ரூ.53977/- க்குண்டானது அசல். |
| 3.மசாஆ 15- | மருத்துவமனை பில்கள் ரூ.11,63,144/- க்குண்டானது அசல். |
| 4 மசாஆ 16- | ஒமேகா மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரி அசல். |
| 5.மசாஆ 17- | அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் ரிப்போர்ட் அசல். |
| 6.மசாஆ 18- | சம்பளச் சான்று அசல். |
| 7.மசாஆ 19- | வருமான வரி செலுத்தியதற்கான ஆன்லைன் நகல். |
| 8.நீமசாஆ 1- | 31.10.2022 தேதியிட்ட கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வழங்கிய நிரந்தர ஊனச்சான்று அசல். |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த தேதி 16.09.2020 என்றால் சரிதான். நான் பயணம் செய்த வாகனம் எனது கணவரின் சொந்த வாகனம் என்றால் சரிதான். எங்கள் வாகனத்தை 4 ம் எதிர்மனுதாரர் ராயல் சுந்தரம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். விபத்தானது கடலூரிலிருந்து சிதம்பரம் செல்லக்கூடிய புறவழிச்சாலையில் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் கணவர்தான் நிலைதடுமாறி 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த கார் மீது மோதி

விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. கோவை கங்கா மருத்துவமனையில் எனது காயத்துக்கு சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் 30 நாட்கள் சிகிச்சை பெற்றேன். சிகிச்சை பெற்ற பிறகும் நான் முன்பு பார்த்து வந்த பதவியை தற்போதும் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1 வருடம் நான் சம்பளம் இல்லா விடுப்பில் இருந்தேன், அதனால் எனது பதவி உயர்வு கிடைக்கவில்லை, எனக்கு சம்பள உயர்வும் கிடைக்கவில்லை. இது குறித்து எனக்கு பணி உயர்வு வழங்காதது சம்பந்தமாகவும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்குக்காக 1 வருடம் சம்பளமும், பதவி உயர்வும் கிடைக்கவில்லை என அதிக நஷ்டஈடு பெறவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து என் கணவரின் அஜாக்கிரதையால் நடந்ததால் 3ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டிய கடப்பாடு இல்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. Ph.D பட்டம் பெற்றவுடன் கல்லூரி முதல்வராக அமர்த்துவதாக கல்லூரி சார்பில் எனக்கு தெரிவித்ததற்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டு மருத்துவமனை பில்களை அதிக நஷ்டஈடு பெறவேண்டி மிகைப்படுத்திப்பெற்று

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மசாஆ 13 டிஸ்சார்ஜ்



சம்மரி அசல் தொலைந்துவிட்டதால் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் கொடுத்துள்ள மருத்துவமனை பில்கள் மற்றும் மருந்து பில்களை நானே தயாரித்து அதிக நஷ்டஈடு பெறவேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து என் கணவரின் அஜாக்கிரதையால் நடந்ததால் 3ம் எதிர்மனுதாரர் நான் மனுவில் கோரியுள்ள நஷ்டஈடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றாலும் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் TN 49 BL 1314 காரை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எனது ஸ்விப்ட் காரில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராகத்தான் முதல் தகவல் அறிக்கையும் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம்

எதிர்மனுதாரர்தான் விபத்துக்கு முழுமையான காரணம் என்பதால் எனக்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்தான் நஷ்டஈடு செலுத்த வேண்டுமென்றால் சரிதான். என்



கணவர் மீது தவறு ஏதும் இல்லை என்பதால் 4ம் எதிர்மனுதாரரிடம் நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி